2005 மார்ச் 9]

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 ஆண்டுகால எங்கள் கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்கு நிறைவேற்றி இருக்கிறார்கள். வார்த்தைகளால் நன்றி சொல்ல முடியாது. தமிழ்நாட்டிலே இருக்கிற ஒன்றரை கோடி ஒடுக்கப்பட்ட மக்களும், அவர்களுடைய வரலாற்றிலே, தானைத் தலைவராகக் கருதிய தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்களைப் பற்றி பேரவைத் தலைவருக்குத் தெரியும். அவருக்கு இன்றைக்கு நினைவுச் சின்னம் வைத்த தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஒன்றரை கோடி மக்களும் (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் உயிரையும் தந்து நன்றி உடையவர்களாக இருப்பார்கள் என்பதை வார்த்தைகளால் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் பாராட்டோடு என்னுடைய பாராட்டையும் இணைத்துக்கொள்கிறேன்.

5. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 10-3-2005, வியாழக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (10-3-2005) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (10-3-2005) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-50 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

— ஏதும் இல்லை —

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

48. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்தி மூன்றாவது அறிக்கை. (2003-2005)

49. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்தி நான்காவது அறிக்கை. (2003-2005)

50. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் ஐம்பத்து நான்காவது அறிக்கை. (2003-2005)

ஐம்பத்து

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS